National Institute of Technology, Tiruchirappalli - 620015

Bay Area, San Francisco, USA Alumni Meet - NIT-T Director urges Alumni to invest Time, Talent & Treasure

முன்னாள் மாணவர்கள் தங்கள் நேரம், திறமை, முதலீடு, இவற்றை முதலீடாகக் கொண்டுவரவேண்டும் நேஷனல் இன்ஸ்ட்டிட்யூட் ஆஃப் டெக்னாலஜி, திருச்சியின் டைரக்டர் வலியுறுத்தல் - ஸான்ஃப்ரான்ஸிஸ்கோ, யூ.எஸ்.ஏ - முன்னாள் மாணவர்கள் சந்திப்பு!

மிகவும் வெற்றிகரமான அமெரிக்காவின் கிழக்குக்கரை முன்னாள் மாணவர்கள் சந்திப்புக்குப் பிறகு, நேஷனல் இன்ஸ்ட்டிட்யூட் ஆஃப் டெக்னாலஜி, திருச்சியின் டைரக்டர், டாக்டர் மினி ஷாஜி தாமஸ், அமெரிக்காவின் மேற்குக் கரையின் முக்கிய நகரமான ஸான்ஃப்ரான்ஸிஸ்கோவில் ஆகஸ்ட் 11, 2018 அன்று மேற்குப் பகுதியின் முன்னாள் மாணவர்களின் மறு-கூடலுக்கு வருகை தந்தார்.

என்.ஐ,டி, திருச்சியை (முன்பு மாநில பொறியியல் கல்லூரி) உலக வரைபடத்தில் ஒரு முக்கிய தொழில்நுட்பக் கல்லூரிகளுள் ஒன்றாகச் செய்யவும், அதை உலகாளாவிய ஒரு "பிராண்ட்" ஆகச் செய்யவேண்டியதன் முக்கியத்துவத்தையும், அதில் அதனுடைய வெற்றிகரமான முன்னாள் மாணவர்களின் பங்கு மிகவும் உள்ளதையும், வலியுறுத்திப்பேசினார். 150க்கும் மேலான 1974-ம் ஆண்டுமுதல், 2017 வரை இங்கு படித்த முன்னாள் மாணவர்கள், பல இடங்களிலிருந்து, இந்த மறு-கூடலுக்கு வந்திருந்ததே இதன் வெற்றியை உறுதி செய்தது.

இந் நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளரான திரு.ராஜா ரங்கநாதன் (1990 வருட மாணவர், 2016 ம் வருட புகழ்பெற்ற முன்னாள் மாணவர் விருதைப் பெற்றவர்), துவக்கத்திலேயே 1979ம் வருட மாணவரான ராஜன் நாராயணன் மறைவை அறிவித்து, அவருடைய பங்களிப்பைப் பற்றி நினைவுகூர்ந்து, ஒரு நிமிட மௌன அஞ்சலியை அனுஷ்டிக்கச் செய்தபிறகு, நிகழ்ச்சித் தொடங்கியது.

திரு கிருஷ்ணா சாய் என்.ஐ.டி, திருச்சியின் முன்னாள் மாணவர்கள் சங்கத் தலைவர், முன்னாள் மாணவர்கள் எப்படி தங்கள் கல்லூரியின் ஒருங்கிணைந்த அங்கமென்பதைச் சுட்டிக்காட்டினார். அவர்களின் RECAL, எவ்வாறு கல்லூரி வளாகத்திற்குள் நடைபெறும் பல ஆக்கபூர்வமான செயல்பாடுகளில் மிகவும் முனைப்பாக ஈடுபட்டுள்ளது என்பதையும், குறிப்பாக, 1990-ம் வருட மாணவர்களால் உருவாக்கப்பட்ட, SCIEnT (Student Center for Innovation in Technology), 1981-ம் வருட மாணவர்களால் உருவாக்கப்பட்ட IoT Lab (Internet of Things), கல்லூரி வளாகத்துக்குள்ளேயே துவக்கப்பட்ட நடுநிலைப் பள்ளி, தவிர 70க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு ஊக்கத்தொகை வழங்குதல் இவற்றையெல்லாம் குறிப்பிட்டும் பேசினார். மேலும் அமெரிக்காவிலும், பலநாடுகளிலும் இக்குழுமம் மேலும் விரிவடைவதற்குத் தன்னார்வத் தொண்டர்களைச் சேர்க்கவேண்டிய அவசியத்தையும் மேலதிகமாகச் சுட்டிக்காட்டினார். பட்டம்பெற்று வரும் மாணவர்கள் தங்களை கீழ்காணும் முன்னாள் மாணவர்களுக்கான இணையதளத்தில் பதிவு செய்துகொள்ளலாம். https://nittrichyalumni.org.

முன்னாள் மாணவ/மாணவியர் திரு. ராம்குமார் வாசுதேவன் (1974), திரு. ரிச்சர்ட் சேகர் (1983), திருமதி தீபா பால்கி (1991) ஆகியோர் தங்களுடைய எண்ணங்களையும், அனுபவங்களையும் பகிர்ந்துகொண்டதோடு, முன்னாள் மாணவர்கள் தங்களைச் செதுக்கியக் கல்வி நிறுவனத்திற்குத் திருப்பித் தரவேண்டிய பங்கீடுகளெவை என்று சிந்தனையைத் தூண்டும் விதமாகவும் பேசினார்கள்.



திருமதி டாக்டர் மினி தாமஸ், என்.ஐ.டி ஒரு வலிமை மிக்க புதுக்கண்டுபிடிப்புகளின், ஆராய்ச்சிகளின் இருப்பிடமாக மாறுவதற்கான தன்னுடைய கனவை, எதிர்காலம் நோக்கியப் பார்வையைப் பகிர்ந்துகொண்டார். தங்கள் கல்லூரியின் பிராண்ட், நாட்டளவின் தேவைகளுக்காகவும், உலக அளவில் போட்டிக்காகவும் இருக்கவேண்டுமென்றும் கூறினார். எரிக்ஸன் நிறுவனத்தில் பணிபுரியும் இணைப்பில்லாத் தொடர்பு தொழில்நுட்பத்தின் வித்தகர், திரு குமார் பாலசந்திரனுக்கு (1986) , புகழ்பெற்ற முன்னாள் மாணவர் விருதை வழங்கிச் சிறப்பிதார்.

மேலும், என்.ஐ.டி கல்லூரி வென்றிருக்கக்கூடிய பல விருதுகள், பாராட்டுகள், ஆராய்ச்சிகள், ஆராய்ச்சி நிதியொதுக்கீடுகள், தொழில்நிறுவனங்களுடனான கூட்டு முயற்சிகள் என்று பலவற்றைப் பற்றியும் பெருமையுடன் பேசினார். நேரம், திறமை, முதலீடு என்ற மூவகைகளிலும் முன்னாள் மாணவர்களின் பங்கீடு இருக்கவேண்டியதையும்க் கூறினார். முன்னாள் மாணவர்களுடனான பரிவர்த்தனைகளுக்காகத் தனிநிர்வாகக் குழுவுடனான அமைப்பொன்றைத் (http://alumni.nitt.edu/) துவங்கியிருப்பதையும் கூறினார்.

இறுதியாக, முன்னாள் மாணவர்களின் கடுமுழைப்பையும், அவர்கள் தங்களுடைய சந்ததியினரையும் என்.ஐ.டிக்கு அனுப்பவேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார்.

பல முன்னாள் மாணவர்களும் தங்களுடைய இனிய மற்றும் பலவிதமான நினைவுகளைப் பறிமாறிக்கொண்டனர். தங்களுடைய கல்லூரி எத்தனைச் சவால்களைச் சந்தித்து, இன்று நாடுதழுவிய என்.ஐ.டிக்களுள் முதன்மையானதாக கடந்த மூன்றாண்டுகளாக இருக்கிறது என்றும் பேசி மகிழ்ந்தார்கள். தங்களுடைய முன்னாள் மாணவர் அமைப்பை வலிமைப் படுத்தவும், உறுதியேற்றனர். ஆக, மறு-கூடல் சந்திப்பு ஒரு மலர்ச்சியான, மகிழ்வான சந்திப்பாக மட்டுமின்றி, பல புதிய திசைகளை நோக்கிப் பயணிக்கும் தீர்மானங்களோடு, உலகளாவிய பிராண்டாக என்.ஐ.டி திருச்சியைச் செலுத்தும் உறுதியோடு நிறைவுற்றது!